நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை.- **திரு பி. மோசஸ் ஜெபசிங், பி.எஸ்சி., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் , வள்ளியூர்

2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் - 22 ம் நாள் திங்கட்கிழமை

**பட்டியல் வழக்கு எண். 348/2017**

**CNR.No. TNTL09-000577-2017**

| | | |
|---|---|---|
| 1 | Name of the Court | Judicial Magistrate, Valliyoor |
| 2 | Name of the Judge | Thiru P. Moses Jebasingh, B.Sc., M.L., |
| 3 | Date of Judgment | 22.06.2026 |
| 4 | Case Number along with CNR No. | CC. 348/2017, Crime No.57/2015<br>CNR.No.TNTL09-000577-2017 |
| 5 | Name of the parties of the case | Sub Inspector of Police, Panagudi<br>Complainant. |
| | | 1. Subash ( Aged 35/2015), S/o. Rethinam, Periyanayakipuram.<br>2. Murugan ( Aged 33/2015), S/o. Rethinam, Periyanayakipuram.<br>3. Mahesh ( Aged 31/2015), S/o. Rethinam, Periyanayakipuram.<br>4. Selvaraj ( Aged 55/2015), S/o. Ponnusamy, Palarpalli street, Leppaikudieruppu.<br>Accused. |
| 6 | Date of occurence | 10.02.2015 |
| 7 | Date of complaint | 11.02.2015 |
| 8 | Date of arrest if any and remand | 11.02.2015 -A4 (Remand rejected with condition) |
| 9 | Period of remand of the accused | ------ |
| 10 | Date of release on bail | 04.09.2015 - Anticipatory Bail – A1<br>26.02.2015 - Anticipatory Bail – A2, A3 |
| 11 | Date of Final Report | 11.02.2015 |
| 12 | Date of committal of case to the court of sessions. | Does not applicable |

| | | |
|---|---|---|
| 13 | Date of questioning of the accused u/s 240 of code criminal procedure. | 29.11.2021 |
| 14 | Date of examination in chief and cross examination of the witnesses. | Witnesses / Chief / Cross:<br>PW1 – 30.05.2023 – 30.05.2023<br>PW2 – 30.05.2023 – No cross<br>PW3 – 25.03.2025 – No cross<br>PW4 – 25.03.2025 – No cross<br>PW5 – 15.04.2025 – 15.04.2025<br>PW6 – 03.06.2025 – 03.06.2025<br>PW7 – 15.07.2025 – 15.07.2025<br>PW8 – 17.03.2026 – 17.03.2026 |
| 15 | Date of Filing of all miscellaneous petitions and the results including the results on challenge before the superior courts except routine petitions like under section 317 of the code. | CrlMP / Petitions / Result:<br>18/2026 – Advance – Allowed<br>19/2026 – Surrender – Allowed<br>20/2026 – Recall – Allowed |
| 16 | Date of examination of the accused under section 313 of the code | 05.06.2026 |
| 17 | Date of abscondance of an accused and his appearance/production as the case may be | 09.04.2026 – 26.05.2026 (A2) |
| 18 | Date of stay by superior courts and the results thereof | Does not arise |
| 19 | Date of commencement of trial | 29.11.2021 |
| 20 | Date of closure of trial | 17.06.2026 |
| 21 | Date of sentence of Order | --------- |
| 22 | Date of service of copy of Judgment to the accused | 22.06.2026 |
| 23 | If any delay, give explanation | This case was pending for trial from 29.11.2021. But witness promptly not |

| | | |
|---|---|---|
| | | produced by prosecution. Hence, delay occured in this case. |

இவ்வழக்கானது கடந்த 13.12.2017 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 17.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்து, அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. H. முகம்மது ரியாஸ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டும், இது நாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்த ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குபின், இன்று இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்படும்..........

**தீர்ப்புரை**

1) அரசு தரப்பில், சாடசி 1 கடந்த 10.12.2015 ம் தேதி இரவு சுமார் 9.00 மணியளவில் லெப்பை குடியிருப்பு ஊருக்கு கீழ்ப்புறம் உள்ள தோட்டத்தில் புல் அறுத்துப்போட்டதை எடுக்க சென்றபோது எதிரிகள் நால்வரும், சாட்சி 1 ஐ பார்த்து தேவடியா மவனே செறுக்கி மவனே கொடுத்த பணத்தை எப்படி திருப்பிக்கேட்ப என்று சொல்லி 1வது எதிரி தன் கையில் வைத்திருந்த அருவாளால் நடுமண்டை, வலது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் வெட்டி ரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், 2, 3, 4 வது எதிரிகள் கம்பால் மாறி மாறி உடம்பில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், மேற்படி நான்கு எதிரிகளும் என்றைக்காவது உன் சாவு எங்கள் கையில் தான் என்று சொல்லி கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) படி பணகுடி காவல் உதவி ஆய்வாளர் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2)இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 190(1) (b) ன் படி கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு குவிமுச பிரிவு 204 ன் படி எதிரிகளுக்கு

அழைப்பாணை சார்பு செய்ய உத்தரவிடப்பட்டது. இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207-ன் கீழ் இலவசமாய் வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கிய பின்பு குற்றம் பற்றி வினவ எதிரிகள் குற்றத்தினை மறுத்தார்கள். ஆவணங்கள் பரிசீலனை செய்து 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) படியும், 2, 3, 4 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(2) படியும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவ எதிரிகள் பொய் வழக்கு என்றார்கள். பின்னர் அரசுத்தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா. 8 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டன.

**4) அரசுத்தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு.-**

4.1) அ.சா.1 திரு. முருகன் தனது சாட்சியத்தில் 10 வது மாதம் 12 ம் தேதியன்று தான் தனது லெப்பை குடியிருப்பு தோட்டத்தில் புல் எடுக்க சென்ற போது உடை உள்ளே மறைந்த இருந்த எதிரிகளில் 1வது எதிரி தன்னை அருவாளால் தலையில் வெட்டியதால் தலையில் இருந்து இரத்தம் வழிந்து தான் கீழே விழுந்தவுடன் 2,3,4 வது எதிரிகள் தன்னை கம்பால் அடித்தும் காலால் உதைத்து தன்னை பார்த்து இதோடு நீ செத்தாய் என்று மிரட்டியதாகவும், 108 ஆம்புலன்சிற்கு போன் மூலம் தகவல் சொல்லப்பட்டு தன்னை ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிட்சைக்காக சேர்த்ததாகவும் மறுநாள் பணகுடி போலீசார் தன்னிடம் மருத்துவமனையில் இருந்து புகார் மனு பெற்றதாகவும் தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் அ.சா.ஆ.1 உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.2) அ.சா.3. திரு. முத்துகுமார் தனது சாட்சியத்தில் பார்வைமகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 தன்னுடையதுதான் என்றும், அ.சா.4. திரு.

சங்கர் தனது சாட்சியத்தில் பார்வைமகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 தன்னுடையதுதான் என சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 திரு. முத்துக்கிருஷ்ணன், அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியமளித்துள்ளார்கள்.

4.3) அ.சா.5. டாக்டர்.சுப்பிரமணியன் தனது சாட்சியத்தில் கடந்த 11.02.2015 அன்று தான் மருத்துவமனையில் பணியில் இருந்த போது அதிகாலை 12.25 மணியளவில் 43 வயதான முருகன் என்பவரை அவருடைய மனைவி வனிதா மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்ட போது கடந்த 10.02.2015 அன்று இரவு 11.30 மணியளவில் வீட்டிற்கு அருகில் வைத்து அவருக்கு தெரிந்த நான்கு நபர்கள் அருவாள் மற்றும் கம்பால் தாக்கியதாகவும் அவரை பரிசோதித்த போது கீழ்கண்ட காயங்கள் இருந்ததாகவும் 1) 4x0.5x0.5 செ.மீ அளவிலான இரண்டு சிதைந்த காயங்கள் இடது பக்க தலையிலும், 2 - வலது முன்னிலையில் 1x0.5x0.5 செ.மீ அளவிலான சிதைந்த காயமும் காணப்பட்டதாகவும், அவர் சிகிட்சை முடிந்து 17.05.2015 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும் அவரது சிகிட்சை விபரங்களின் படி அவரது காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்று சான்றிதழ் வழங்கப்பட்டதாகவும் தன்னிடம் காட்டப்படும் காயச்சான்று (அ.சா.ஆ.4) தான் வழங்கியதாகவும் இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.4) அ.சா.6. திரு. முத்துகுமார் தனது சாட்சியத்தில் கடந்த 11.02.2015 ம் தேதி 11.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருக்கும் போது பணகுடி பெண் முதல் நிலை காவலர் திருமதி. 2574 ஹெலன் என்பவர் உதவி ஆய்வாளர் உத்தரவுபடி ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த லெப்பைகுடியிருப்பு நாராயணசாமி கோவில் தெருவை சேர்ந்த முருகன் என்பவரது இண்டிமேசனை பெற்று அங்கு சிகிட்சையில் இருந்த முருகன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து 11.30 மணிக்கு தன்னிடம் ஆஜர் செய்த புகார் மனுவை பெற்று

அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 57/2015 ல் இ.த.ச. பிரிவு 294(பி), 323,324,506(2) படி வழக்கு பதிவு செய்ததாகவும் புகார் மனு, இண்டிமேசன் மற்றும் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் வள்ளியூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. தமிழரசன் அவர்கள் பார்வைக்கு வைத்ததாகவும் இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் அந்த இண்டிமேசன் அ.சா.ஆ.5 தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை தன்னிடம் காட்டப்படுவதாகவும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

4.5) அ.சா.7. திருமதி. ஹெலன் தனது சாட்சியத்தில் கடந்த 11.02.2015 ம் தேதி ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த இண்டிமேசன் படி மேற்படி மருத்துவமனை சென்று இண்டிமேசன் பெற்று சிகிட்சையில் இருந்த லெப்பைக்குடியிருப்பை சேர்ந்த சுப்பிரமணிய நாடார் மகன் முருகன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று காலை 11.30 நிலையம் வந்து அறிக்கை செய்தததாகவும் இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.6) அ.சா.8. திரு. சுரேஷ்குமார் தனது சாட்சியத்தில் கடந்த 11.02.2015 அன்று முதல் நிலை காவலர் செல்வசுப்பிரமணியன் நிலைய பொறுப்பில் இருந்த போது 11.30 மணிக்கு பெண் முதல் நிலை காவலர் திருமதி. ஹெலன் என்பவர் உத்தரவுப்படி நாகர்கோவில் ஆசாரிபள்ளம் மருத்துவகல்லூரி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிட்சையில் இருந்த முருன் என்பவரது இண்டிமேசன் பெற்று மேற்படி முருகன் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து முதல் நிலை காவலர் செல்வசுப்பிரமணியன் என்பவரிடம் கொடுத்துள்ளதாகவும் அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 57/2015 இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323,324,506(2) படி வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் புகார் மனுவினையும் இண்டிமேசன் முதல் தகவல்

அறிக்கையையும் இணைத்து கனம் வள்ளியூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.தமிழரசன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளதாகவும் பின்னர் உதவி ஆய்வாளர் திரு.தமிழரசன் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் சாட்சிகள் முத்துக்குமார் மற்றும் சங்கர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.7), மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.8) தயார் செய்துள்ளதாகவும் சாட்சிகள் 1 முதல் 4 மற்றும் 7 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும் இவ்வழக்கின் 4ம் எதிரி செல்வராஜ் என்பவரை 15.15 மணிக்கு அன்றைய தினமே பணகுடி பஸ்ஸ்டாண்டில் வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் 20.02.2015 அன்று இவ்வழக்கை தனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவத்தில் தொடர்புடைய சாட்சிகளை விசாரித்தபோது முந்தைய விசாரணை அதிகாரியிடம் கூறியதை தன்னிடம் கூறியதால் தான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 26.02.2015 அன்று வழக்கின் 2 மற்றும் 3 எதிரிகள் மதுரை உயர் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று பிணையில் சென்றதால் கைது செய்யவில்லை எனவும் இவ்வழக்கின் முதலாம் எதிரி சுபாஷ் என்பவர் 26.08.2015 அன்று மதுரை உயர் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று பிணையில் சென்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றும் இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிட்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் வழக்கின் விசாரணையை முடித்து 25.09.2015 அன்று எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

5) பின்னர் அரசு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சாட்சிகளின் சாட்சியங்களில்

எதிரிகளுக்கு பாதகம் தரக்கூடிய அம்சங்களை குறித்து எதிரிகளிடம் குற்றவிசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் வினவிய போது எதிரிகள் பொய் சாட்சி என்று தெரிவித்தார்கள். தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றார்கள். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6) இவ்வழக்கில் நாம் தற்போது தீர்மானிக்க வேண்டியது யாதெனில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

6.1) எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாடுகளுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை ஆராய்கையில், அ.சா.1 தனது முதல் விசாரணையில் தனது லெப்பைக்குடியிருப்பு தோட்டத்தில் புல் எடுக்க சென்றபோது உடை மரங்களில் எதிரிகள் மறைந்திருந்தார்கள் என்றும், 1 வது எதிரி தன்னை அருவாளால் தனது தலையில் வெட்டியதால் தலையில் ரத்தம் வடிந்தது என்றும், 2, 3, 4 வது எதிரிகள் தான் கீழே விழுந்ததும் தன்னை கம்பால் அடித்து காலால் உதைத்தார்கள் என்றும், எதிரிகள் தன்னை பார்த்து இத்தோடு செத்தாய் என்று மிரட்டினார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் சாட்சியம் மருத்துவ சாட்சியத்தை அனுசரித்துள்ளதா என்பதை ஆராய்கையில் மருத்துவரான அ.சா.5 தனது சாட்சியத்தில் கடந்த 11.02.2015 ம் தேதியன்று ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தபோது அதிகாலை 12.25 மணிக்கு அ.சா.1 சிகிட்சைக்காக அழைத்து வரப்பட்டார் என்றும், அவரை பரிசோதித்தபோது அவரது இடது பக்க தலையில் 4x0.5x0.5 செ.மீ அளவில் சிதைந்த காயங்கள் காணப்பட்டது என்றும், அவரது வலது முன் கையில் 1x0.5x0.5 செ.மீ அளவில் சிதைந்த காயம் காணப்பட்டதாகவும், அவர் சிகிட்சை முடிந்து 17.05.2015 அன்று மருத்துவமனையிலிருநது விடுவிக்கப்பட்டதாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியதாக சாட்சியமளித்துள்ளார்.

6.2) மேற்படி சாட்சியங்கள் மூலம் அ.சா.1 ஐ மருத்துவர் கடந்த 11.02.2015 அன்று

அதிகாலை 12.25 மணிக்கு பரிசோதித்தபோது அ.சா.1ன் தலையின் இடது பக்கம் 4x0.5x0.5 செ.மீ இரண்டு சிதைந்த காயங்கள் காணப்பட்டது என்றும், அ.சா.1ன் வலது முன் கையில் 4x0.5x0.5 செ.மீ அளவில் சிதைந்த காயம் காணப்பட்டுள்ளது என்றும் தெளிவாக தெரியவருகிறது. அ.சா.1 இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியாவார். காயம்பட்ட சாட்சியின் சாட்சியத்தை நிராகரிக்கவேண்டுமென்றால் அதற்கு தொடர் கோர்வையான சாட்சியம் அவசியமாகும். எதிரிகள் தரப்பில் அ.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்தபோது அ.சா.1 இரவு பொழுதில் மது அருந்திவிட்டு வரப்பிலும், கரடு முரடான பாதையில் கால் தவறி கீழே விழுந்ததால் ஏற்பட்டுள்ள காயத்தை பயன்படுத்தை எதிரிகளை பழிவாங்கவேண்டுமென்ற காரணத்திற்காகவும், 1வது எதிரியிடம் செங்கல் எடுத்த பணத்தை கொடுக்காமல் ஏமாற்றவேண்டுமென்ற காரணத்திற்காகவும் பொய்யாக புகார் கொடுத்துள்ளதாக கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அ.சா.1 அதை மறுத்துள்ளார். இதுகுறித்து மருத்துவரிடம் எதிரிகள் தரப்பில் காயம்பட்ட நபர் இரு சக்கரவாகனத்தில் மது அருந்திவிட்டு வேகமாக செல்லும்போதும், கீழே விழும்போதும் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார்.

6.3) எதிரிகள் தரப்பில் சம்பவத்தன்று அ.சா.1 மது அருந்திவிட்டு இரு சக்கர வாகனத்தில் வேகமாக சென்று கீழே விழும்போது மேற்படி காயம் ஏற்பட்டுள்ளது என்று கட்சி வைக்கப்பட்டுள்ளது. அ.சா. 1ன் காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றை ஆராய்கையில் அ.சா.1 மருத்துவமனையில் சிகிட்சையில் சேர்ந்தபோது மது போதையில் இருந்ததாக துலங்கவில்லை. மேலும் இதுகுறித்து சாட்சியமளித்துள்ள மருத்துவரான அ.சா.5 தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று அ.சா.1க்கு சிகிட்சை வழங்கியபோது அவர் மதுபோதையில் இருந்ததாக கூறவில்லை. எனவே எதிரிகள் தரப்பில் மேற்படி வழக்கானது நம்பத்தகுந்த நிலையிலும், ஏற்புடையநிலையிலும் இல்லை என தீர்மானிக்கப்படுகிறது.

6.4) மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் இந்த சம்பவத்திற்கு ஆறு மாதத்திற்கு முன்பு தனக்கும் எதிரிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக முன்விரோதம் உள்ளது என சாட்சியமளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் அதை மறுக்கவில்லை. எனவே தரப்பினர்களுக்கிடையே சம்பவத்திற்கு முன்பாக முன்விரோதம் இருந்தது என தெளிவாக தெரியவருகிறது. மேலும் எதிரிகள் தரப்பில் அ.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்தபோது சம்பவ தினத்தன்று 4 வது எதிரி செல்வராஜை அடித்து காயப்படுத்தினேன் என்றால் சரியல்ல என சாட்சியமளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் சம்பவத்தன்று அ.சா.1 மது போதையில் கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாக கட்சி வைக்கப்பட்டு அதற்கு முற்றிலும் மாறாக சம்பவத்தன்று அ.சா.1, 4 வது எதிரியை அடித்து காயப்படுத்தியதாக கட்சி வைக்கப்பட்டுள்ளது.

6.5) எதிரிகள் தரப்பில் மேற்படி சம்பவம் குறித்து மேற்கண்டவாறு குறுக்கு விசாரணையின்போது ஏற்றுக்கொண்டு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் 4 வது எதிரி செல்வராஜ் 11.02.2015 அன்று மதியம் 3.15 மணிக்கு வழக்கின் விசாரணை அதிகாரியால் கைது செய்யப்பட்டு அன்றையதினமே நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். வழக்கு கோப்பை ஆராய்கையில் அப்போது 4 வது எதிரிக்கு காயம் இருந்ததாக துலங்கவில்லை. எனவே எதிரிகள் தரப்பு கட்சியானது முன்னுக்குப்பின் முரணாக உள்ளது என தெரியவருகிறது. மேலும் அ.சா.1 ன் சாட்சியத்தை முழுமையாக ஆராய்கையில் அவை இயல்பாகவும், நம்பத்தகுந்த நிலையிலும், இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் திருப்திகரமாக உள்ளது.

6.6) அ.சா.1 காயம்பட்ட சாட்சி என்பதால் காயம்பட்ட சாட்சியின் சாட்சியத்தை நிராகரிக்கவேண்டும் என்றால் தொடர் கோர்வை சாட்சியம் அவசியமாகும். ஆனால் எதிரிகள் தரப்பில் அவ்வாறு தொடர் கோர்வை சாட்சியங்கள் எதுவும் துலங்கவில்லை. எதிரிகள் தரப்பில் எடுத்துரைக்கப்படும் சிறுசிறு முரண்பாடுகள் அரசு தரப்பு வழக்கை முற்றிலுமாக புறக்கணிக்கும் வகையில் இல்லை என இந்நீதிமன்றம்

கருதுகிறது. மேலும் சம்பவ சாட்சியாக பட்டியலிடப்பட்டுள்ள அ.சா.2 பிறழ்சாட்சியமளித்துள்ளார். குற்ற வழக்கில் சாட்சிகளின் எண்ணிக்கை தேவையில்லை என்றும் சாட்சிகளின் சாட்சியங்களின் நம்பகத்தன்மையை தேவை என மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் வடிவேல் தேவர் எதிர் மாநிலம் என்ற வழக்கில் AIR 1957 SC 614 என்ற வழக்கில் ஒரு சாட்சியின் சாட்சியம் முழுமையாக நம்பும் நிலையில் இருந்தால் (Wholly Reliable) அதை அடிப்படையாக வைத்து வழக்கை தீர்மானிக்கலாம் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பை கருத்தில்கொண்டு இவ்வழக்கில் அ.சா.1ன் சாட்சியத்தை முழுமையாக ஆராய்கையில் அவை திருப்திகரமாக உள்ளது. எனவே சம்பவ சாட்சியாக பட்டியலிடப்பட்டுள்ள அ.சா.2 பிறழ் சாட்சியமளித்துள்ளது அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என தீர்மானிக்கிறது.

6.7) மேலும் சாட்சிகள் வாயிலாக சம்பவத்தன்று அ.சா.1ன் தலையின் இடது பக்க தலையில் 4x0.5x0.5 செ.மீ அளவில் இரண்டு சிதைந்த காயங்கள் மற்றும் தலையின் முன்பக்கத்தில் 1x0.5x0.5 செ.மீ அளவில் சிதைந்த காயம் ஏற்பட்டுள்ளதும் தெளிவாக தெரியவருகிறது. அ.சா.1 தனது முதல் விசாரணையில்1வது எதிரி தன்னை அருவாளால் தனது தலையில் வெட்டியதால் தலையில் ரத்தம் வடிந்தது என சாட்சியமளித்துள்ளார், 2, 3, 4 வது எதிரிகள் தன்னை கம்பால் அடித்து காலால் உதைத்ததாக சாட்சியமளித்துள்ளார். அரசு தரப்பில் 2 முதல் 4 எதிரிகள் அடித்ததில் அ.சா.1க்கு ஊமைக்காயம் ஏற்பட்டுள்ளது என கட்சி வைக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் அ.சா.1ன் சாட்சியத்தை நிராகரிக்கும் விதமாக சாட்சியங்கள் எதுவும் துலங்கவில்லை.

6.8) மேலும் அ.சா.1ன் சாட்சியம் இயல்பாகவும், நம்பத்தகுந்த நிலையிலும் உள்ளதாகவும், அ.சா.1ன் சாட்சியத்தின் மூலமும், அ.சா.ஆ.1 புகார் மனு, அ.சா.ஆ.4 காயச்சான்று, அ.சா.ஆ.5 இன்டிமேசன், அ.சா.ஆ.6 முதல் தகவலறிக்கை ஆகியவற்றின் மூலமும் 1வது எதிரி மீதான இதச பிரிவுகள் 324, 506(2) ன் படியான

குற்றச்சாட்டுகளும், 2 முதல் 4 வரையான எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 323, 506(2) ன் படியான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்படுகிறது. ஏனைய குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வு காணப்படுகிறது.

6.9) மேலே பரிசீலனை செய்தவகையில் 1வது எதிரி மீதான இதச பிரிவுகள் 324, 506(2) ன் கீழான குற்றச்சாட்டுகளின் படி குற்றவாளி என்றும், 2 முதல் 4 வரையான எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 323, 506(2)ன் கீழான குற்றச்சாட்டுகளின்படி குற்றவாளிகள் என்றும் தீர்மானிக்கப்படுகிறது. எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் என தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் எதிரிகளுக்கு வழங்கப்போகும் தண்டனைகள் குறித்து குவிமுச பிரிவு 248(2)ன் கீழ் வினவியபோது 1வது எதிரி தான் டிரைவர் வேலை பார்த்து வருவதாகவும், தனக்கு ஒரு மகன் இருப்பதாகவும், தற்போது 6 ம் வகுப்பு படித்து வருவதாகவும், தன் மீது வேறு வழக்கு எதுவும் இல்லை என்றும், தனது குடும்ப சூழ்நிலையை கருத்திற்கொண்டு அபராதம் மட்டும் விதிக்குமாறு கேட்டுக்கொண்டார். 2வது எதிரி தான் டிரைவர் வேலை பார்த்து வருவதாகவும், தனக்கு மூன்று ஆண்குழந்தைகள் மற்றும் ஒரு பெண் குழந்தை இருப்பதாகவும், தனது மனைவி வீட்டுக்குடித்தனம் நடத்திவருவதாகவும், தன் மீது வேறு வழக்கு எதுவும் இல்லை என்றும், தனது குடும்ப சூழ்நிலையை கருத்திற்கொண்டு அபராதம் மட்டும் விதிக்குமாறு கேட்டுக்கொண்டார். 3 வது எதிரி தான் டிரைவர் வேலை பார்த்து வருவதாகவும், தன் மீது வேறு வழக்கு எதுவும் இல்லை என்றும், தனது அம்மா இறந்துவிட்டார் என்றும், தற்போது அப்பாவுடன் வசித்து வருவதாகவும், தனது குடும்ப சூழ்நிலையை கருத்திற்கொண்டு அபராதம் மட்டும் விதிக்குமாறு கேட்டுக்கொண்டார். 4 வது எதிரி தனக்கு தற்போது 75 வயதாகிறது என்றும், தன் மீது வேறு வழக்கு எதுவும் இல்லை என்றும், தனது வயதை கருத்திற்கொண்டு அபராதம் மட்டும் விதிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

எதிரிகளின் வேண்டுகோள் மற்றும் வழக்கு சூழ்நிலை கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கின் சம்பவ காலம் 2015 ம் ஆண்டு ஆகும். சம்பவ சூழ்நிலையை கருத்திற்கொண்டு, எதிரிகளுக்கு கீழ்கண்டவாறு இவ்வழக்கில் அபராதம் மட்டும் விதிக்கலாம் என தீர்மானிக்கப்படுகிறது.

6.10) முடிவாக 1 வது எதிரி மீதான இதச பிரிவு 324 ன் படியான குற்றச்சாட்டிற்கு ரூ. 5,000/- அபராதம் விதித்தும், அபராதத்தை செலுத்த தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், 2, 3, 4 வது எதிரிகள் மீதான இதச பிரிவு 323 ன் படியான குற்றச்சாட்டிற்கு தலா ரூ. 1,000/- அபராதம் விதித்தும், அபராதத்தை செலுத்த தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், 1, 2, 3, 4 வது எதிரிகள் மீதான இதச பிரிவு 506(2) ன் படியான குற்றச்சாட்டிற்கு தலா ரூ. 2,000/- அபராதம் விதித்தும், அபராதத்தை செலுத்த தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், கு.வி.மு.ச.பிரிவு 248(2)-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. (மொத்த அபராதத் தொகை ரூ. 16,000/- வசூலிக்கப்பட்டது)

8)இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 22 ம் நாள் இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/- பி. மோசஸ் ஜெபசிங்**

**நீதித்துறை நடுவர்,**

**வள்ளியூர்.**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்.-</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. முருகன் |
| அ.சா.2 | திரு.முத்துக்கிருஷ்ணன் |

| | |
|---|---|
| அ.சா. 3 | திரு.முத்துக்குமார் |
| அ.சா. 4 | திரு.சங்கர் |
| அ.சா. 5 | திரு.சுப்பிரமணியன் ( மருத்துவர்) |
| அ.சா. 6 | திரு.செல்வசுப்பிரமணியன் |
| அ.சா. 7 | திருமதி. ஹெலன் |
| அ.சா. 8 | திரு. சுரேஷ்குமார் ( காவல் உதவி ஆய்வாளர்) |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்.-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11.02.2015 | புகார்மனு |
| அ.சா.ஆ.2 | 11.02.2015 | பார்வைமகஜரிலுள்ள அ.சா.3 ன் முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 11.02.2015 | பார்வைமகஜரிலுள்ள அ.சா4 ன் இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 17.02.2015 | காயச்சான்று |
| அ.சா.ஆ. 5 | 11.02.2015 | இன்டிமேசன் |
| அ.சா.ஆ. 6 | 11.02.2015 | முதல் தகவலறிக்கை |
| அ.சா.ஆ. 7 | 11.02.2015 | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ. 8 | 11.02.2015 | மாதிரிவரைபடம் |

**அரசு தரப்பு சான்று பொருள்** - இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை.

**ஒம்/- பி. மோசஸ் ஜெபசிங்**

**நீதித்துறை நடுவர்,**

**வள்ளியூர்.**

<u>குறிப்பு</u>

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
3. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.

நகல்.... 1) மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர், திருநெல்வேலி.